Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 41/2025** |
| Deposition of witness for | :: | **PW. 11** |
| Name | :: | **ராபியம்மாள் ( சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**15.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது விருதுநகர் மாவட்டம் தமிழ்நாடு அரசு சிங்கபெண் படையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.01.2024 ம் தேதி நான் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் தசரதன் அவர்களால் பதிவு செய்யப்பட்ட நிலைய குற்ற எண். 16/2024 பிரிவு 279, 337 இதசவின் கீழான வழக்கு கோப்பினை பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

2. பின்னர் அன்றைய தினம் மாலை 17.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான அருப்புக்கோட்டை – பாலவநத்தம் ரோடு சுகிர்தா டைல்ஸ் அருகில் சென்று சாட்சிகள் பழனிமுருகன், பாலு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( பார்வை மகஜர் அசாஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் ஆ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் அன்றைய தினம் புகார்தாரர் ஜாஸ்மின்பேபி, சாட்சிகள் அந்தோணிபிச்சை, ராமன், மணிகண்டன், பன்னீர்செல்வம், மூர்த்தி மற்றும்

பார்வை மகஜர் சாட்சிகளான பழனிமுருகன், பாலு ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிய வந்து எதிரியை தேடி வந்த நிலையில் 24.01.2024 ம் தேதி 11.30 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான மாரிமுத்து என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து குற்றமானது பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால் தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்தேன்.

5. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கு விபத்தை ஏற்படுத்திய TN 67 AC 0192 என்ற பதிவெண் கொண்ட சந்திரா டிரான்ஸ்போர்ட் தனியார் நிறுவன பேருந்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தினேன்.

6. பின்னர் 01.02.2024 ம் தேதி இவ்வழக்கில் விபத்திற்குள்ளான TN 67 BV 4180 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தினேன்.

7. பின்னர் 14.02.2024 ம் தேதி 14.20 மணிக்கு இவ்வழக்கில் காயம்பட்ட ஜோதியம்மாள் என்பவர் மதுரை ஹானாஜோசப் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டதாக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலின் அடிப்படையில் வழக்கு கோப்பினை அருப்புக்கோட்டை தாலுகா வட்ட காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்த ஆய்வாளர் பாலமுருகன் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறும் சாட்சிகளான அசா.4 ராமன், அசா.6 மணிகண்டன், அசா.5 பன்னீர்செல்வம், அசா.7 மூர்த்தி ஆகியோர்கள் சம்பவத்தை நேரில் பார்த்ததாக என்னிடம் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் மேற்படி சாட்சிகள் அனைவரும் நீதிமன்ற விசாரணையின்போது வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள காரணத்தினால்

நான் முறையாக சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அசாஆ.6 மாதிரி வரைபடத்தில் சாலையின் அகலம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து அருகில் உள்ள இடங்கள் எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது என்று அளவு பற்றிய குறிப்புகள் எதுவும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

2. அசா.6 மணிகண்டன் எனது விசாரணையின்போது பாலவநத்தம் கிராமத்தில் சுகிர்தா டைல்ஸ் கடைக்கு பக்கத்தில் டூவீலர் ஒர்க் ஷாப் கடை வைத்து நடத்தி வருவதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் உள்ள சுகிர்தா டைல்ஸ் கடைக்கு அருகே எந்தவொரு டூவீலர் ஒர்க் ஷாப் கடையும் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். 24.01.2024 ல் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்ததாக தான் வழக்கு ஆவணங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தான் எதிரியை காவல் நிலையத்திலேயே பிணையில் விடுவித்தேன் என்றால் சரிதான். அப்போது பழனிமுருகன் (அசா.9) மற்றும் பாலு (அசா.8) ஆகியோர்கள் எதிரிக்கு ஜாமீன்தாரர்களாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. மேற்படி பழனிமுருகன் மற்றும் பாலு ஆகியோர்கள் தான் பார்வை மகஜர் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு சாட்சிகளும் நீதிமன்ற விசாரணையின்போது காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ள காரணத்தினால் நான் சம்பவ இடத்திற்கு சென்று சொன்ன நாள் தேதி நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் மேற்படி இரண்டு சாட்சிகளிடமும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. எத்தனை மணிக்கு தசரதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் (அசா.10) என்னிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தார் என்றால் 22.01.2024 ம் தேதி மாலை 05.00 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து ஒப்படைத்தார்.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்த பார்வை மகஜர் ஆவணமானது

காவல் நிலையத்திலிருந்து 12 கிமீ தொலைவில் உள்ள சம்பவ இடத்தில் வைத்து 22.01.2024 ம் தேதி மாலை 05.00 மணிக்கு தயார் செய்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காரணத்தினால் நான் 05.00 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை நான் இவ்வழக்கில் முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**